## The 6th World Evangelism Program at Kumily - Sep.2016





**World Evangelism Bible School**
**First Batch 2014 -2016**

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Nov. 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M & Nambikkai TV
on Monday &
Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):

- [ ] Refused
- [ ] No such person
- [ ] Address insufficient
- [ ] Left without instructions
- [ ] Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 நவம்பர் 2016 கனி 12

## வௌவால்



## Bat

**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

***Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:***
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தமிழகத்தில் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாதாந்திர வாசகர் கூட்டங்கள்










**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN
Associate Editor
K.R.K.Ravi Asir

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை, ஜெ.சி.சோட், பெட்டி சோட்
செய்திகள்: ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
செய்திகள்: மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 195

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.


1. பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள் அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி மழையைக் கட்டளையிடுவார் என்று எந்த தீர்க்கதரிசி சொன்னான்?
2. அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள் அவரிடத்தில் பாவமிருந்ததா?
3. சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினால் என்ன பிரயோஜனம் என்றவர்கள் யார்?
4. அம்மாளுக்கு புதிய கற்பனையாக எழுதாமல், ஆதிமுதல் உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி வேண்டிக்கொண்ட அப்போஸ்தலன் யார்?
5. உன் தகப்பன் உன்னிடத்தில் ஆணையிடுவித்தபடியே, நீ போய் அவரை அடக்கம் பண்ணிவா என்று சொன்ன ராஜா யார்?
6. ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது என்ற அப்போஸ்தலன் யார்?
7. யாருடைய நாட்களில் திருப்பணிக்கு போதுமான பொருட்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருந்தது?
8. பாதாளத்தின் தூதனுக்கு கிரேக்க பாஷையில் அவன் பெயர் என்ன?
9. இஸ்ரவேலருக்கு ஐம்பதாம் வருஷம் என்ன வருஷமாக இருந்தது? அதில் தேசமெங்கும் குடியிருந்தவர்களுக்கு கர்த்தர் என்ன கூற கட்டளை பெற்றார்கள்?
10. நாம் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, எது நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேன் என்றார் பவுல்?

### போட்டியாளர்கள் கவனிக்க... வேதாகமம் பரிசு

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்கிறவர்கள் இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும் 13

நாள்: 22.11.2016, செவ்வாய்கிழமை
நேரம்: காலை 10.00மணி
இடம்: Mrs.ஆலிவ் ஜெயபாலன்
113, ராஜன் காலனி
எஸ்.என்.பாளையம்
கோவை -641 007
தொடர்புக்கு: 94422 25826



- பழைய பிரமாணத்தின்படி புசிக்கத்தகாதவைகளில் ஒன்று - லேவி.11:19
- இவைகள் பண்டைய கால இரவில் வேலை செய்கிற பறவைகளாகக் கருதப்பட்டவை.
- இது குட்டிபோட்டு பாலூட்டும் யோர்தான் பள்ளத்தாக்கில் வாழ்கின்ற பிராணி.
- பாறை வெடிப்புகளிலும், இருண்ட குகைப்பகுதியிலும் வாழ்பவை.
- வழக்கமாக சிக்காமோர் மரத்தின் பழங்களைத் தின்று வாழும். பறக்கும் எகிப்திய நாய்களைத் தவிர மற்ற பூச்சிகளை உண்ணும் பிராணி.



**வௌவால் Bat**

சிறுவர் பகுதி

## பொய் தீர்க்கதரிசி

*வேதபகுதி: எரேமியா 28:1-17*



பழைய ஏற்பாட்டு புத்தகத்திலே அநேக தீர்க்கதரிசிகளைக் குறித்து படித்தும், கேள்விப்பட்டும் இருப்பீர்கள். எரேமியாவின் நாட்களில் அனனியா என்கிற ஒரு தீர்க்கதரிசியுமிருந்தான். அவனோ எரேமியாவின் வார்த்தைக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னான். என்னவென்று கேட்கிறீர்களா?

இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து பாபிலோனுக்குக் எடுத்துக் கொண்டுபோன கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையெல்லாம் நான் இரண்டு வருஷகாலத்திலே இவ்விடத்துக்குத் திரும்பக் கொண்டுவரப் பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்களும் சகல ஜனங்களும் பார்த்திருக்க எரேமியாவை நோக்கி சொன்னான்.

எரேமியாவோ நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும்; பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று முன்னமே சொல்லியிருந்தான். அனனியாவோ இரண்டுவருஷகாலத்திலே இவ்விடத்துக்கு வரும் என்றான். தீர்க்கதரிசி சொன்னபடி நடந்தால் அவனே மெய்யான தீர்க்கதரிசி அனனியா சொன்னபடி நடக்கவில்லை திரும்பவும் கர்த்தர் எரேமியாவோடே பேசி: நீ போய், அனனியாவை நோக்கி: நீ மரநுகத்தை உடைத்தாய்; அதற்குப்பதிலாக இருப்பு நுகத்தை உண்டுண்ணு என்று கர்த்தர் சொன்னார். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரைச் சேவிக்கும்படிக்கு இருப்பு நுகத்தை இந்த எல்லா ஜாதிகளுடைய கழுத்தின்மேலும் போட்டேன் என்றான். அனனியாவோ பொய் சொன்னதினால் அவ்வருஷத்திலே ஏழாம் மாதத்திலே செத்துப்போனான். பொய் சொன்னதாலே அவனுக்கு மரணம் வந்தது கர்த்தர் சொல்லாத காரியத்தை கர்த்தர் சொன்னார் என்றால் இப்படித்தான் சம்பவிக்கும். ஆகையால் நீங்கள் பொய் சொல்லாமல் தேவசமூகத்தில் உண்மைபேச கற்றுக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்:**

மனப்பாட வசனம்:
"அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப்
பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்;
நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா29:9).




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 16 நவம்பர் -2016 கனி - 12


ஆசிரியருரை

## கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படியிருக்கவேண்டும்?
## How Should Be The Lord`s Servant?




**க**ர்த்தருக்கு ஊழியம் செய்ய சிலர் ஒப்புக்கொடுக்கிறார்கள். நல்லது தான். ஆனால் அவர்கள் எப்படியிருக்க வேண்டுமென வேதாகமம் போதிக்கிறது. "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்" என அப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் (எபே.6:6-8). உலக வேலைசெய்கிறவர்களுக்கும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. கர்த்தருடைய ஊழியத்தை உலகவேலைக்கு ஒப்பிட முடியாது. உலகவேலையில் மனுஷரை பிரியப்படுத்த வேலைசெய்வார்கள். கர்த்தருடைய ஊழியம் அப்படிப்பட்டது அல்ல. கர்த்தருக்கென்று நல்மனதோடே செய்யவேண்டும். ஒரு ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாய் இருக்கக்கூடாது என படிக்கிறோம். "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்" (2தீமோ.2:24). சமாதானத்தை போதிக்கிறவன் சண்டைபண்ணிக் கொண்டிருந்தால் அவன் எப்படி கர்த்தருடைய வசனத்தை மற்றவர்களுக்கு போதிப்பான்.

மேலும் **அவன் போதகசமர்த்தனுமாயிருக்கவும் தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டுமென** காண்கிறோம். அப்படிப்பட்டவர்களே கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என எழுதுகிறார் (2தீமோ.2:15). வெட்கப்படக்கூடிய ஒரு நபர் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடியாது.

சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? அது இரட்சிப்பை உலகமக்களுக்கு கொடுக்கக்கூடியது. அதைக்குறித்த வைராக்கியம், வல்லமையுள்ள சுவிசேஷத்தை எடுத்துச்சொல்வதில் ஆர்வம் வெளிப்படவேண்டும். "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" என காண்கிறோம் (2தீமோ.4:2). சுவிசேஷத்தை சொல்லுவதற்கு நேரத்தையோ காலத்தையோ நோக்கிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவன் வாயிலிருந்து வெளிப்படுவது இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியாகிய சுவிசேஷமாக இருக்கவேண்டும். மேலும் "உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" என்கிறார் பவுல் (1தீமோ.4:16). வேதாகமம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் அதைப்பயன்படுத்துவது அவ்வளவு எளிதானதல்ல. கர்த்தருடைய உபதேசத்தைப் போதிக்கும்போது ஒரு ஊழியக்காரன் மிகவும் அந்த உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையுள்ளவனாக இருக்கவேண்டும்.

**கர்த்தர், ஊழியக்காரர்களை கர்த்தர் சும்மா வேலைவாங்க விரும்பமாட்டார்.** அவர்களுக்கு அதினால் பிழைப்பு உண்டாக்கிவைத்திருக்கிறார். "அந்தப்படி சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1கொ.9:14). வேலை செய்கிறவன் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான். உலக ஏஜமான்களுக்கு வேலைசெய்கிறவர்களுக்கு அன்றாடபடி கொடுக்கப்படுகிறது. அதைப்போல கர்த்தரும் எவரையும் வெறுமனே வேலைகொள்ள விரும்பவில்லை. ஆக, சுவிசேஷத்தை அறிவிக்கிற அவர்களுக்கு அந்த சுவிசேஷத்தினாலே பிழைப்பை ஏற்படுத்தியிருக்கிறார் என்று படிக்கிறோம். ஒரு சுவிசேஷகன் பலவந்தமாக ஏற்படுத்தப்படுவதில்லை. அதை அவன் கடமையாக கொள்ளவேண்டும். "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" என்கிறார் பவுல் (1கொ.9:16). கடமைக்காக செய்கிறவர்கள் உண்டு. அந்தவிதமாக கடமைக்காக செய்வதைப்பற்றி இவ்வசனம் நமக்கு போதிக்கவில்லை. அதை நான் தான் செய்யவேண்டும். ஏனெனில் அது எனக்குத்தான் தெரியும். அந்த சுவிசேஷம் எப்படிவந்தது? அது எதற்காக வந்தது? அதன் பயன் என்ன? போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முடியும். கடமைக்காக செய்கிறவர்கள் அதனுடைய விலை மதிப்பை அறியார்கள். இந்த சுவிசேஷம் யாருக்கு சொல்லப்படவேண்டும் என்ற கேள்வியை எழுப்புவோமானால்; வேதம் சொல்லுகிறது "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலோ.1:23). ஆண்டவரும் நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்றார். அந்தப்படியாக இன்றுவரை சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாருக்கும் பலவகையில் எடுத்துச்செல்லப்படுகிறது. அதற்கென்றே பவுல் தன்னை சுவிசேஷத்தில் ஈடுபடுத்திக்கொண்டார் என காண்கிறோம். இந்த சுவிசேஷ ஊழியம் அன்பின் ஊழியம். இது கட்டாயத்தின்பேரில் செய்யக்கூடிய ஊழியம் அல்ல என்பதை நாம்





**சகோதரர் பழனிச்சாமி** அவர்கள் கடந்த 27.09.2016-ல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் நீலகிரி பகுதியில் உள்ள குன்னூர், கக்கன் நகர், சிங்காரா ஸ்டேட், உபதலை, அருவங்காடு, நான்சச் போன்ற பகுதிகளில் கர்த்தருடைய ஊழியத்தை செய்தவர்.

சகோ.பி.ஆர்.சாமி அவர்களுடைய ரேடியோ செய்தியைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் ஊழியம் செய்தவர். சகோதரர் அவர்களை நான் 1984 முதல் அறிவேன். அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்காகவும், சபையாருக்காகவும் ஜெபியுங்கள்.

**கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது - சங்கீதம் 116:15**

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத் துறை செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?
   அ) கோகிலா அய்யர் ஆ) அரிதா கவுர் இ) துர்கா பானர்ஜி
2. மத்திய கிழக்கு ரெயில்வேயின் தலைமையிடம் எது?
   அ) ஜெய்ப்பூர் ஆ) ஹஜ்பூர் இ) மும்பை
3. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை நீக்கியவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) ஜார்ஜ்வாஷிங்டன் இ) ஆபிரகாம் லிங்கன்
4. சீனாவின் காகித நாணயம் எது?
   அ) பிசோ ஆ) லிரா இ) யூவான்
5. உலகிலேயே தொழிற்சாலை அதிகம் உள்ள நகரம் எது?
   அ) ஹாங்கோ ஆ) டோக்கியோ இ) வாஷிங்டன்

**விடைகள்:** 1.கோகிலா அய்யர் 2.ஹஜ்பூர் 3.ஆபிரகாம் லிங்கன் 4.யூவான் 5.டோக்கியோ

## வாருங்கள் தேவனை ஆராதிப்போம்

**கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்**
**38,மேயர் சிட்டிபாபு தெரு,**
**எல்லிஸ்ரோடு**
**(மவுன்ட்ரோடு சமீபம்)**
**திருவல்லிக்கேணி**
**சென்னை -600 005**
**தொடர்புக்கு:**
**சகோ.தாமஸ்**
**9884047398**

**சகோ.அர்ஜுனன்**
**சபை ஊழியர்**
**94435 58041**

‘ஒரே வழி’ வேதபாடம்
**The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று
**Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College,**
**P.O. Box No. 5,**
**Batlagundu-624 202,**
**South India.**

**THE ONE WAY**

பெண்கள் பகுதி

இழந்து போன ஆத்துமாவுக்காக
நாம் எவ்வாறு பேரார்வத்தைப்
பெருகப்பண்ண முடியும்?

**How Can We Develop Passion for the Lost?**

*-Paula Bates*

**- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

**யாரேனும் சுவிசேஷத்தை உங்களுக்குப் போதித்து அல்லது உங்களுடன் பகிர்ந்து கொண்டதுண்டா?**

**எபேசியர் 3:9 நாமனைவரும்** இந்த மீட்பின் கிருபையைப் பற்றி கூறவேண்டும். பவுல் தான் கிறிஸ்துவினுடைய அறிவுக்கெட்டாத அளவற்ற ஐசுவரியத்தை போதிக்க வேண்டுமென்றும் அப்போது தான் **அனைவரும்** மனித அறிவுக்கெட்டாத அந்த பரமரகசியம் என்னவென்றும் அறிய முடியும் என்றான்.

எபேசியர் 3:20,21 "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்"

லூக்கா 15:7 மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்.

**நாம் 99 பேரைக்குறித்து நினைக்கிறோம். ஆனால் தேவன் வேறுவிதமாக நினைக்கிறார் அவர் ஒரே பாவியைக் குறித்து கவலை கொண்டார். தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல.**

**ஒன்றின் மதிப்பு:** எத்தியோப்பியன் மந்திரியிடம் பேசும்போது பிலிப்பு 2 நாட்கள் பயணம் செய்ய அறிவுறுத்தப்பட்டான் மேலும் பிலிப்பு இருந்த இடத்தில ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தது.

பவுல்- மக்கெதோனியாவிலுள்ள ஒரு பட்டணத்துக்குப்போக அறிவுறுத்தப்பட்டான். அங்கே யூதருடைய ஆலயமில்லாததால் ஆற்றினருகே கூடிவந்த ஒரு கூட்ட ஸ்திரீகள் வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு ... அவன் அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்து போதித்துக்கொண்டுவந்தான். முன்பு அவன் வேறு இடத்திற்குச் செல்ல விரும்பினான் ஆனால் அவன் சந்தித்த லீதியாள் இருந்த மக்கெதோனியாவுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டான்.

**நாம் நம்மை எவ்வாறு ஆயத்தப்படுத்திக்கொள்ள முடியும்?**

1. ஏதோ ஒரு வழியில் இழந்து போனவர்களைக் கிட்டிச் சேருங்கள்.
2. வழக்கமாக நீ செய்ய விரும்பாததையல்லாமல் இழந்துபோனவர்களுக்காக சிலவற்றை செய்யுங்கள் - புதிதாக சிலவற்றை செய்ய முயற்சியுங்கள்.
3. இழந்து போனவர்களை மீட்க முயற்சிசெய்கிற மற்ற கிறிஸ்தவர்களோடு நண்பர்களாக இருங்கள்.
4. கடைசியாக தொடர் ஜெபத்திலும், வேதபாட வகுப்புகளிலும் தியானங்களிலும் இழந்து போனவர்கள் மீட்கப்படுவார்கள் என விசுவாசியுங்கள். **நாம் மற்ற கிறிஸ்தவர்களை நம்முடைய சொந்த குடும்பத்தார்களையும் கூட ஆதாயப்படுத்திக் கொள்ள முடியுமா?**

1. ஒருவரையும் கட்டாயப்படுத்த முடியாது.
2. மாதிரியாக இருங்கள்
3. உன்னோடு வரும்படி சிலரை அழைத்து - அவர்களுக்கு ஒரு சிறு சந்தர்ப்பம் கொடுங்கள் அப்போது அவர்கள் கொஞ்சங்கொஞ்சமாகக் கற்றுக் கொள்ளுவார்கள்.
4. ஊழியத்தைக் குறித்து நேர்மறையான வழியில் சொல்லுங்கள்.
5. ஒரு புதிய நபர் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுகிறபோது சந்தோஷமாயிருங்கள். மேலும் அவர்களை உங்களுடைய பக்கமாகச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

மத்தேயு மற்றும் மாற்கு புத்தகத்தில் இயேசுவின் கடைசி கட்டளை நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருட்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்பதாக இருநதது.



முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலா.5:13). மேலும், "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா.1:10). ஒவ்வொரு ஊழியனும் கர்த்தரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்துகொண்டு ஊழியத்தை செய்யவேண்டும். மனுஷரைப்பிரியப்படுத்தி ஊழியஞ்செய்கிறதினாலே அவன் கர்த்தருக்கேற்ற ஒரு ஊழியக்காரனாக இருக்கமுடியாது.

**ஒரு ஊழியன் தர்ம பணத்தை குறித்த விஷயத்தில் உண்மையுள்ளவனாயிருக்க போதிக்கப்படுகிறான்.** பவுல் இந்த விஷயத்தில் "எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து" என குறிப்பிடுகிறார் (2கொ.8:20). ஊழியத்தில் நற்சாட்சி மிகவும் அவசியம். மற்றவர்கள் நம்மீது நம்பிக்கையற்றவர்களாக இருக்கும்போது நாம் சொல்லக்கூடிய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வது கடினம். இதனால் சுவிசேஷம் தடைபடும். ஒவ்வொரு சுவிசேஷகனும் தன்னைப் பற்றிய கதைகளைச் சொல்லாமல் சுவிசேஷத்தை அறிவிக்கிறவனாக இருக்க பிரயாசப்படவேண்டும். பவுல் சொல்லுகிறார்; "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்கிறார் (2கொரி.4:5). ஒரு சுவிசேஷகன் இயேசுவின் நிமித்தமாக ஜனங்களுக்கு ஊழியக்காரனாக இருக்கிறான். அதற்கேற்ற கூலியை அவன் கர்த்தரிடத்தில் பெறுவான். மேலும் பவுல்; "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்" என்கிறார் (2கொ.4:2). கிறிஸ்தவம் உண்மையின் மார்க்கம். அதில் கூட்டிச்சொல்வதற்கோ, அல்லது குறைத்து சொல்வதற்கோ இடமில்லை. அநேக மார்க்கங்கள் உலகத்தில் இருக்கிறது. அவைகளை சிலர் கூட்டியும் குறைத்தும் திரித்தும் கூறுவர். வேதாகமத்தை பொறுத்தவரை சத்தியத்தை சத்தியமாகவே சுவிசேஷகர்கள் பிரசங்கித்து வருகிறார்கள். தந்திரமாகவும் வேதவசனத்தை புரட்டியும் சொல்லவேண்டிய அவசியமில்லை. உண்மை சத்தியத்தை எடுத்துரைக்கும்போது தேவனால் உண்டானவர்கள் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறார்கள். தேவனால் உண்டாகாதவர்கள் தேவனுடைய வசனங்களுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். அதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் அறிந்துகொள்கிறோம்.

மேலும், **ஒரு ஊழியன் கர்த்தருக்கு ஊழியக்காரனாயிருக்கிறான் என்பதை அவன் ஒருபோதும் மறந்துபோகாதிருக்கவேண்டும்.** ஏனெனில் பவுல் கொரிந்துசபைக்கு எழுதும்போது; "உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே" என்கிறார் (2கொரி.1:24). சில சபை

போதகர்கள் தாங்கள் அதிகாரிகள்போல விசுவாசிகளிடம் நடந்துகொள்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் அந்தவிதமாக நடந்துகொள்ளவில்லை. அவர்களுடைய சந்தோஷத்திற்குச் சகாயராக இருந்திருக்கிறார். அவரவர் விசுவாசத்தினால் நிற்கிறார்கள். கிறிஸ்துவானவர் நமக்கு என்ன கட்டளை கொடுத்திருக்கிறாரோ அவைகளை செய்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதை விட்டு விட்டு நாம் மற்றவர்கள் மீது துரைத்தனம் பண்ணுவது நல்லதல்ல. அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவன் ஒருவருக்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டியவனாயிருக்கிறான். நாம் நம்முடைய கணக்கை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையால் "ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" (ரோம.12:7,8). அவரவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்வார்களேயானால் கர்த்தருடைய சபை வளர்ச்சிப் பாதையில் இருக்கும். தேவையில்லாமல் மற்றவர்களுடைய வேலையில் தலையிடும்போது கர்த்தருடைய ஊழியம் பாதிக்கப்படுகிறது. சபையிலே அவரவருடைய தாலந்துகளுக்கு ஏற்றவாறு தேவன் வேலையை கொடுத்திருக்கிறார். இதில் தாலந்து குறைவாக இருக்கிறவன் நிறைவாக இருக்கிறவனைப் பார்த்து பொறாமை கொண்டு அவனைப்போல நான் செயல்படவேண்டும் என்று நினைத்து அந்த பதவிக்கு முயற்சிப்பது பலன் அளிக்காது. தனக்கு என்ன வேலையை கொடுத்திருக்கிறாரோ அதை அவன் சிறப்பாக தேவனுடைய சமுகத்தில் செய்து நிறைவேற்றும்போது, தேவன் அதற்குமேலான பதவிகளை அவனுக்குக் கொடுப்பார். ஆகையால் நீங்கள் ஒரு சபைபோதகராக இருந்தால் அவைகளில் இன்னும் தேர்ச்சியடைய முற்படுங்கள் அல்லது நீங்கள் ஒரு சுவிசேஷகராக ஊழியராக இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை சிறப்புடன் செய்து அதைநிறைவேற்றுங்கள். எதுவாக இருந்தாலும் கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினாலே வாய்க்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கவேண்டும். "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" (ரோம.12:11). கர்த்தருடைய ஊழியக்காரன் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யவேண்டும். அப்பொழுது தேவனால் அவன் கனத்தைப் பெற்றுக்கொள்ளுவான்.

**ஒரு ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தமாக தீங்கு அநுபவிக்கவேண்டுமா?**

ஆம், ஒரு ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தம் தீங்கு அநுபவிக்கவேண்டும். அப்படியானால் யார் இந்த வேலைக்கு வருவார்கள் என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இவைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். இயேசு சொல்கிறார்; "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவா.12:26). இயேசுவை பின்பற்றி அவருக்கு ஊழியஞ்செய்கிறவன் பிதாவினால் ஆசீர்வதிக்கப்படுகிறான். மனிதர்களை பின்பற்றி



**வாசகர் கடிதம்**

ஸ்தோத்திரம் திரு. சகோதரர் அர்ஜீனன் ஐயா அவர்களுக்கு ஸ்தோத்திரத்தோடு எழுதிய கடிதம். இயேசு கிறிஸ்து நாமத்தினாலே வாழ்த்துகிறேன். டிவியில் ஒளிப்பரப்பாகும் நிகழ்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். தாங்கள் வெளியிடும் பத்திரிகை படிக்க விரும்புகிறேன். தயவு செய்து உங்கள் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் புத்தகத்தை எனக்கு அனுப்பிவைக்கவும். என் குடும்பத்திற்காக பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும். என் மகன் செல்வராஜ், நித்தியராஜ், மனைவி சாந்தி, மாமியார் ராஜாமணிஅம்மாள் அவர்களுக்காகவும் ஜெபிக்கவும்.

**V.விஸ்வநாதன்**

**வேத அறிவுப் போட்டியாளர்கள் கவனத்திற்கு**

நீங்கள் தொடர்ந்து வேதஅறிவுப் போட்டியில் கலந்து கொள்வது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

ஒரு நாளில் யாவரையும் அழைத்து நற்சான்றிதழ் கொடுக்கவுள்ளோம்.

**நீங்கள் விடைகளை எழுதி அனுப்பும்போது உங்களுடைய பெயரை மட்டும் தெளிவாக தமிழில் எழுதவும்.** சிலர் ஆங்கிலத்தில் கையெழுத்து மட்டும் போடுகிறார்கள். நாங்கள் பெயரைக்கண்டு பிடிக்க மிகவும் கஷ்டப் படுகிறோம்.

ஒவ்வொரு முறையும் உங்கள் பதிவு எண் மற்றும் மொபைல் எண்ணுடன் முகவரியை தெளிவாக ஆங்கிலத்தில் எழுதி அனுப்பவேண்டும்

**ஆசிரியர்**

## நடப்புச் செய்திகள்

- இரண்டாம் உலகப்போரின்போது, ஜெர்மனியின் சர்வாதிகாரியாக திகழ்ந்தவர் ஹிட்லர். அவர் வாழ்ந்த வீட்டை இடித்து தள்ள ஆஸ்திரிய அரசு முடிவு செய்துள்ளது.
- மாற்றுத்திறனாளிகள் பிரதமரின் சுயவேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் கடன் பெற விண்ணப்பிக்கலாம்.
- பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் அனைத்து பணியாளர்கள் ஓய்வு பெறும் வயதை 60 ஆக மாற்ற தீர்மானம்.

18.Mrs.சாந்தாபழனி - தருமபுரி
19.Mrs.ரூத் ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
20.D.சாந்தாதேவி - தேனி
21.S.லதா - தேனி
22.Mrs.பிரேமா தினகரன் - தூத்துக்குடி
23.A.டேவிட் ஜெயச்சந்திரன்- மதுரை
24.R.அந்தோனியம்மாள் - தூத்துக்குடி
25.S.சாந்தகுமாரி - நாசரேத்
26.Mrs.ஜேனி தர்மராஜ் - திருநெல்வேலி
27.Tmt.மரகதம் திரவியம்- கோம்பை
28.K.சாந்தி - வாடிப்பட்டி
29.D.தேவபுஸ்பம் - தூத்துக்குடி
30.J.வனிதா வில்சன் - தேனி
32.Mrs.ஜெபா நியூட்டன் - திருநெல்வேலி
32.E.அதிசயம் - பனைகுடி
33.Mrs.அன்புக்கமலம் - சிவகங்கை
34.Mrs.பால் மார்டின் - சிவகங்கை
35.A.ரெபேக்காள் - மதுரை
36.A.ஆலிஸ் குணசீலி - ஸ்ரீவைகுண்டம்
37.Sis.ஜாய் மேத்யூ - விக்ரமசிங்கபுரம்
38.S.ஜாய் சந்திரா - நல்லூர்
39.Mrs.ஃபிராங்கிலினாஜான்- ஊட்டி
40.R.ஞானசிரோன்மணி - மதுரை
41.K.ரத்னாபாய் பிரசாத் - மதுரை
42.Mrs.ருபி ஜெபராஜ் - மதுரை
43.J.ரேச்சல் தமிழிரசி - பசுமலை
44.K.மாணிக்கவாசகம் - திருச்சி
45.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
46.Sis.அன்னம்மாள் - தூத்துக்குடி
47.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
48.Sis.ஜாய் வாசுகி - கோவை
49.Mrs.ருபவல்யா - நாசரேத்
50.R.அனிதா நெகேமியா - திருநெல்வேலி
51.J.ராணிஜான்சன் - ஆனந்தபுரம்
52.A.ஜெயந்தி - குமாரபாளையம்
53.B.ஞானதீபம்ஜெபராஜ் - இடையன்குடி
54.Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
55.R.எமிமாள் - ஆனந்தபுரம்
56.A.N.K.லோகி - வேலூர்
57.S.R.பெரியசாமி - சேலூர்
58.J.விக்டர் - தூத்துக்குடி
60.K.ராணி - தூத்துக்குடி
61.Mrs.ஜோதிமணிஅப்பாத்துரை - ஸ்ரீவில்லிப்புத்தூர்
62.Mrs.பிரமிளாரேவதி - கோவை
63.D.டயானா நேதாஜி - நாங்குனேரி

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

### வேத அறிவுப்போட்டி எண் 192–ன் விடைகள்

1.தேவனுடைய - பிர.3:13
2. கோபாக்கினைக்கு - ரோ.12:19
3. எனக்கு வாசிக்கத்தெரியாது என்பான் - ஏசா.29:13
4.கர்த்தருக்குரியவைகளுக்காக - 1கொரி.7:32
5. சிதேக்கியா - எரே.37:21
6.பவுல் - 2கொரி.7:5
7. எரேமியா - புல.3:18
8. கடனாளியாயிருக்கிறான் - கலா.5:3
9. ஆம் - எசே.18:27
10. கிறிஸ்து - எபே.2:18

### வேத அறிவுப்போட்டி எண் 192–ல் வெற்றிபெற்றவர்கள்

1.A.டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
2.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
3.A.ஜெயந்தி - குமாரபாளையம்
4.Sis.ஜாய் மேத்யு - விக்கிரமசிங்கபுரம்
5.Mrs.ஆலிவ் ஜெயபாலன்-கோவை
6.Mrs.தேவபுஸ்பம் - தூத்துக்குடி
7.Mrs.ஃபிராங்கிலினாஜான்- ஊட்டி
8.Mrs.ஆலீஸ் குணசீலி - தூத்துக்குடி
9.S.ஜாய் சந்திர காந்தா - திருநெல்வேலி
10.P.சந்திரா டேனியேல் - திருநெல்வேலி
11.J.ஆஷா ஹெலன் - ஏம்பல்
12.S.அன்னம்மாள் - தூத்துக்குடி
13.B.ஞானதீபம் ஜெபராஜ் - இடையான்குடி
14.Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
15.P.ரூத் பிரின்ஸ் - கரூர்
16.M.சித்ரா - பாண்டமங்கலம்
17.N.இந்திராஜெபக்கனி - நாசரேத்
18.Mrs.அல்லிராணி காட்வின் - சென்னை
20.Mrs.சொர்ணமணி தாமஸ் - தூத்துக்குடி
21.Sis.இரஜம்மாள் - திருப்பூர்
22.Mrs.ஞானம் பிலிப்பு - கோவை
23.Mrs.ஜெயமணி ராஜம்மாள்- கடலூர்
24.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
25.R.எமிமாள் - ஆனந்தபுரம்
26.G.நிர்மலா வின்சென்ட் - புங்கமுத்தூர்
27.T.ராஜாத்தி - கோம்பை
28.S.ரேணுகா செல்வராஜ்- நசரேத்
29.Mrs.ஜெபக்கனி - சங்கரன்கோவில்
30.Mrs.கெத்சி செல்வின் - சென்னை
31.A.ரெபேக்காள் - மதுரை
32.R.ஞானசிரோன்மணி - மதுரை
33.R.சிவா - பெனலூர்பெட்
34.Mrs.சுசிலா ராஜசிங் - திருநெல்வேலி
35.Mrs.ருக்மணி ஜெயசீலன்- பன்னைப்புரம்
36.T.ஃபுலோரா எழில் - ஆம்பூர்
37.Sis.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
38.M.இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
39.Mrs.லங்காஜீவரத்னம்- சிவகாசி
40.Mrs.தேவதா தேவப்பிரியம்- தாம்பரம் மேற்கு
41.Mrs.சாந்தா பழனி - தருமபுரி
42.S.ஜெயராஜ் - பொள்ளாச்சி
43.E.ஜாய்ஸ் ஹெலன் புனிதா - சென்னை
44.V.C.ருபவலியா - நாசரேத்
45.Mrs.ஜோதிமணி - ஸ்ரீவில்லிப்புத்தூர்
46.Mrs.ருபிஜெபராஜ் - மதுரை
47.R.மேரி கெத்ஷி டேவிட் - பாளையங்கோட்டை
48.R.அனிதா நெகேமியா - திருநெல்வேலி
49.J.மெர்லின் - திருச்சி
50.K.ரத்னாபாய் பிரசாத் - மதுரை
51.Mrs.ஜெபா மோசஸ் - விளாத்திகுளம்
52.S.சாந்தகுமாரி - நாசரேத்
53.J.ரேச்சல் தமிழரசி - பசுமலை
54.D.சாந்தா தேவி - பன்னைப்புரம்
55.B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
56.J.S.மேரிதாய் - திண்டுக்கல்
57.K.சாந்தி - வாடிப்பட்டி
58.Mrs.ஜேனி தர்மராஜ் - திருநெல்வேலி
59.S.தங்கம் - கன்னியாகுமரி
60.T.ஏஞ்சலின் நேசமலர் - கன்னியாகுமரி
61.K.ராணி - தூத்துக்குடி
62.S.A.சாமுவேல் - பரமத்திவேலூர்
63.Mrs.ரூத் ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
64.J.விக்டர் - ஆனந்தபுரம்
65.T.சத்தியா - வெங்கரை
66.V.முருகேசன் - வெங்கரை
67.T.விஜயலெட்சுமி - வெங்கரை
68.T.சரிதா - வெங்கரை
69.R.அந்தோனியம்மாள் - தூத்துக்குடி
70.T.கேசவன் - வெங்கரை
71.M.அமுதவள்ளி - வெங்கரை தோப்புக்காடு
72.P.மார்த்தாள் - பாண்டமங்கலம்
73.K.ஜீவாமிர்தம் - பாண்டமங்கலம்

### வேத அறிவுப்போட்டி எண் 193–ன் விடைகள்

1.தரியு - தானி.6:16
2. பவுல் - பிலி.4:9
3. ஓசியா - ஓசி.1:2
4. பவுல் - கொலோ.1:28
5. யோவேல் - யோவே.2:28
6.தெசலோனிக்கேய சபைக்கு - 1தெச.4:12
7. ஆமோஸ் - ஆமோ.5:23
8. ஆம் - 1தீமோ.3:4
9. ஒபதியா - ஒப.3
10. தீமோத்தேயு - 2 தீமோ.1:18

### வேத அறிவுப்போட்டி எண் 193–ல் வெற்றிபெற்றவர்கள்

1.Mrs.கெத்சி செல்வின் - சென்னை
2.Mrs.தேவதா தேப்பிரியம்- சென்னை
3.E.ஜாய் ஹெலன் புனிதா- சென்னை
4.P.சந்திரா டேனியல் - நஞ்சான்குளம்
5.Mrs.அல்லிராணிகாட்வின்- சென்னை
6.Mrs.ஜோதிமணிஅப்பாதுரை- சென்னை
7.Mrs.பிரமிளா ரேவதி - கோவை
8.T.ஏஞ்சலின் நேசமலர் - கன்னியாகுமரி
9.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
10.T.ராஜாத்தி - கோம்பை
11.J.ஜான் பிரபாகர் - தேனி
12.A.ஜெபக்கனி - திருநெல்வேலி
13.N.ஜெபத்தாய் - தூத்துக்குடி
14.Mrs.ஃபுளோரா எழில் - ஆம்பூர்
15.Mrs.ஜெயமணி ராஜம்மாள் - கடலூர்
16.Mrs.ஆலிவ் ஜெயபாலன்- கோவை
17.Sis.தேவராஜசிங் - திருப்பூர்



ஊழியஞ்செய்கிறவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். உண்மையான ஒரு ஊழியன் சுவிசேஷத்தின் நிமித்தமாக தீங்கு அநுபவிக்கவேண்டும். இதையே பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" என்றார் (2தீமோ.4;5). ஒரு உண்மையுள்ள ஊழியக்காரனுக்கு அநேக பொறுப்பு இருக்கிறது. அவன் மனத்தெளிவுள்ளவனாயிருக்கவேண்டும், தீங்கநுபவித்துக்கொண்டு சுவிசேஷக வேலையை செய்யவேண்டும். அத்தோடு நின்றுவிடாமல் அவனுடைய ஊழியத்தை அவன் நிறைவேற்றவேண்டும் பாதியிலே விட்டு விட்டுச் செல்லும் வேலையில்லை இது. நீங்கள் எப்படிப்பட்டவர்? உங்களுடைய ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதிக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"நான் என்னை நீதிமானாக்கினாலும் என் வாயே என்னைக் குற்றவாளியாக்கும்" – யோபு 9:20**

**ஜெபியுங்கள்**

- சென்ற மாதம் நாகர்கோவில் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றமைக்காக...
- நமது மாத இதழ் 7000 பிரதிகள் வரை வெளியிட அஞ்சலக அனுமதி கிடைத்தமைக்காக...
- டிசம்பர் மாதம் திருச்சியில் நடைபெறவுள்ள அனைத்து கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் கூட்டத்திற்காக..
- புதுவருட ஊழியங்களுக்காகவும் அதனுடைய வேலைகளுக்காகவும்..

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**
**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**

**தெரிந்து கொள்வோம்**

## முதன் முதலில்.....

K.R.K.Ravi Asir, Associate Editor

- கூட்டுறவு இயக்கத்தை முதலில் தொடங்கியவர் ராபர்ட் ஓவன்.
- இந்தியாவில் முதன் முதலில் ஓடிய ரயில் எஞ்சினின் பெயர் ஃபயரி குயின் (Fairy Queen).
- சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடந்த ஆண்டு 1952.
- இந்தியாவின் முதல் தொலைக்காட்சித் தொடரின் பெயர் திஸ்ரா ராஸ்தா.
- தமிழ் நாட்டில் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற முதல் பெண்மணி டாக்டர் ருக்மணி லட்சுமிபதி.
- இந்தியாவில் முதல் சோதனைக்குழாய் குழந்தையை உருவாக்கியவர் இந்திரா ஹிந்துஜா.
- இந்தியாவின் முதல் தபால்தலை கராச்சியில் 1854-ல் வெளியிடப்பட்டது.
- சென்னையில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் படம் சீனிவாச கல்யாணம்.
- உலகிலேயே முதன் முதலாக அணுசக்தி நிலையத்தை ஏற்படுத்திய நாடு இங்கிலாந்து 1956.

## ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை உண்டு?

Why There is Power in the Blood of Christ? *J.C.Choate*

இரத்தத்தைப் பற்றி சில ஜனங்களுக்கு நல்ல அபிப்ராயம் இருக்காது. இது துண்டிக்கப்படுதல், காயம் அல்லது மரணத்தைக் கூட சுட்டிக்காண்பிக்கலாம். மத உலகில் சிலர் தங்களுடைய அகராதியில் இரத்தம் என்ற அந்த வார்த்தையை நீக்கிவிட முயற்சிக்கின்றனர்.

பழைய ஏற்பாட்டின் காலங்களில் தேவன் மிருகபலிகள் அல்லது இரத்த பலிகளை மனிதனுடைய பாவத்திற்கு நிவாரணமாகக் கேட்டார். இரத்தம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் இரத்தத்தில் ஜீவனிருப்பதால் இது ஜீவனைக் குறிக்கிறது. இந்தக் காரணத்திற்காக, இரத்தம் சாப்பிடுதல் தவறென விலக்கப் பட்டிருக்கிறது. “மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம்; உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்கவேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்” (லேவி.17:11,12) என வாசிக்கிறோம். பழைய உடன்படிக்கையுங்கூட இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டது. “எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப் போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன் படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது” (எபி.9:19-22) என்று எபிரெய ஆசிரியர் சொல்கிறார். மேலும் எபிரெய ஆசிரியர், பிரதான ஆசாரியர் வருஷத்திற்கொரு முறை இரத்தத்தோடே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, “...... அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்” (எபி.9:7). அதன்பின் எபிரெய எழுத்தர் “அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே” என முடிக்கிறார் (எபி.10:4).

மிருகங்களின் பலிகள் சிறந்த ஆடாகவும், குற்றமற்றதாக அல்லது ஊனமற்றதாகவும் இருந்தபோதிலும் அவைகள் அசைவற்றவைகள், ஆனால் மிருகங்கள். ஆனபடியினால் ஒரு குற்றமற்ற பலி தேவைப் பட்டது. மிருகங்களின் இரத்தம் அந்த குற்றமற்ற பலியின் இரத்தத்தை மாதிரியாக காண்பித்தது. ஆனால் மிருகங்கள் பாவத்தை நிவர்த்தி செய்யமுடியாதபடியினாலும், மனிதன் தாமே பாவியாக இருந்தபடியினால், தன்னையும் மற்றவர்களையும் இரட்சிக்க முடியாதபடியினாலும், அதன்பின் அந்த குற்றமற்ற பலியாக யார் தன்னை அர்ப்பணிக்க முடியும்? ஆனால் ஒருவர் இருந்தார், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவர். அவர் பாவஞ் செய்யவில்லை என்று





# தமிழக கிறிஸ்துவின் சபை
# ஊழியர்களுக்கான
# சிறப்பு ஐக்கிய கூட்டம்

**இடம்: ஹோட்டல் அருண், 24, ஸ்டேட்பேங் ரோடு, (ரயில்வே ஸ்டேஷன் சமீபம்) திருச்சி -1**

**நாள்: செவ்வாய்கிழமை 13.12.2016**

**நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**





- **கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**
- **உங்கள் வருகையை உறுதிசெய்ய 94435 58041 என்ற எண்ணுக்கு SMS மூலம் உங்கள் முழு முகவரியை பதிவு செய்து கொள்ளுங்கள்.**
- **வருகைதரும் ஊழியர்களுக்கு விலையேறப்பெற்ற சிறப்பு பரிசு காத்திருக்கிறது.**
- **உங்கள் ஊழியத்தின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.**
- **டிசம்பர் 5-ம் தேதிக்குள் பதிவு செய்த அனைவருக்கும் அழைப்புக்கடிதம் அனுப்பப்படும். வாருங்கள் ஒருமனப்பட்டு ஜெபிப்போம்.**

**"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்"**
**(யோவான் 17:21)**

பெண்கள் பகுதி

# தாய்
# Mother

*J.Glory Arjunan*



வேதாகமத்தின் துணை கொண்டு ஒரு "தாய்" எப்படியிருக்க வேண்டுமென பார்ப்போம்.

"தாய்" என்ற ஸ்தானத்தைப் பெற்றவர்கள் வேதம் கூறுகிறபடி தவறாமல், சற்றும் பிசகாமல் நடக்கிற போது மிகுந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்நன்மைகள் நமக்கு மாத்திரமல்ல சமுதாயத்திற்கே ஆசீர்வாதங்களை கொண்டு வரும் ஒருவேளை கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் தன் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்கத் தவறும்போது பலவிதங்களில் வேதனைளை அநுபவிக்க நேரிடும். முதலாவது வெவ்வேறு விதங்களில் ஆசீர்வாதங்களை இழந்த ஒரு சில சம்பவங்களை குறித்து ஆராய்ந்து நாம் எப்படி நம் பிள்ளைகளை வளர்க்கவேண்டுமென கற்றுக்கொள்வோம்.

ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய் என்று அழைக்கப்பட்டவள் ஏவாள். இவள் ஸ்திரீகளின் சிருஷ்டிப்பில் முதற்பெண். இவள் தன் மூத்த மகன், இப்பூமியில் முதல் வாரிசு காயீனைப் பெற்று கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள் (ஆதி.4:1). முதன் முதலில் ஓர் ஆண் மகனை பெற்றெடுத்தோம் என்று நினைத்து எவ்வளவு மகிழ்ந்திருப்பாள்! கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றவள், கர்த்தருக்கென்று அவனை வளர்த்தாளா? ஏற்கனவே கர்த்தரின் கட்டளையை மீறி புசிக்க வேண்டாம் என்று கூறிய கனியைப் புசித்து ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்டோமே, தன்னுடைய மீறுதலினாலே பூமி சபிக்கப்பட்டதே, இனியாவது முதல் குடும்பமாகிய நம்வீட்டிற்குள் பாவம் தலைதூக்கிவிடக்கூடாது என்று எச்சரிக்கையுடன் காயீனை வளர்த்தாளா? அதற்கான ஆதாரம் கொடுக்கப்படவில்லை. ஆனால் காயீன் தேவனுக்குக் காணிக்கை கொடுக்க அறிந்திருந்தான், "காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் (கர்த்தர்) அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி அவன் முகநாடி வேறுபட்டது" (ஆதி.4:5). கர்த்தருக்கு எப்படி காணிக்கை கொடுக்க வேண்டுமென அவன் அறியவில்லை. மேலும் தேவனுடைய அன்பினையும் அறியவில்லை, நன்மை செய்யவும் அறியவில்லை (தன் தாயின் மூலம் பூமியில் பிரவேசித்த பாவம் இவனையும் பிடித்துக்கொண்டதுபோலும், தன் சொந்த சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி அவனைக் கொலை செய்தான் (ஆதி.4:8). பூமியின் முதல் கொலையாளி. பிசாசு கொல்லவும் அழிக்கவும் வருகிறான் என்ற வசனத்திற்கேற்ப பிசாசின் குணம் இவனுக்குள்ளும் வந்தது.) காரணம், பொறாமை, எரிச்சல், "...கர்த்தர், காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்... என்றார்" (ஆதி.4:6,7). கர்த்தரின் சத்தம் கேட்ட காயீன் கீழ்ப்படிந்தானா? இல்லை. அன்பு தாய்மார்களே, உங்கள் பிள்ளைகளுக்கு நன்மை செய்யக் கற்றுக்கொடுங்கள். பிறரிடம் கர்த்தருக்குள் (தூய்மையான) அன்பு செலுத்தக் கற்றுக்கொடுங்கள். நம் பிள்ளைகள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருக்க வேண்டுமே. 1கொரி.13-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள அன்பின் இலக்கணத்தைக் கற்றுக் கொடுங்கள். அன்புக்குப் பொறாமையில்லை, அயோக்கியமானதைச் செய்யாது, சினமடையாது, சகலத்தையும் சகிக்கும்....

**- தொடரும்**



பேதுரு கூறுகிறார் (1பேது.2:2). ஏனென்றால் அவர் பாவமற்றவராய் வாழ்ந்தார், நியாயப்பிரமாணத்தைக் குற்றமற கைக்கொண்டவராக, சோதனைக்கு இணங்காதவராக, அதன்பின் அவர் உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையின் மேல் மரிக்க தகுதியுடையவராக இருந்தார்.

கிறிஸ்துவின் இரத்தத்தை வலியுறுத்திக் கூறுகிற சில பாடல்களை நாம் பாடுகிறோம். "இரத்தத்தில் வல்லமையுண்டு" என்ற ஒரு பாடலை நாம் பாடுகிறோம். இன்னொன்று, "எது என்னுடைய பாவத்தைக் கழுவ முடியும்? இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றும் இல்லை" என்கிறது. அந்த வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவைகள்!

இரட்சிக்கக் கூடாத அநேகக் காரியங்கள் உள்ளன. ஏற்கனவே குறிப்பிட்ட, மிருகங்களின் இரத்தம் நம்மை இரட்சிக்காது. நியாயப்பிரமாணம்கூட நம்மை இரட்சிக்காது. அவை ஜனங்களை கிறிஸ்துவினிடத்தில் மட்டுமே கொண்டுவந்து சேர்க்கிறது. பவுல், "அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய் பாவத்தின்கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" (கலா.3:22-25). நியாயப்பிரமாணத்தின் கிரியையினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பது மட்டுமல்ல, நம்முடைய சுயக் கிரியைகளினாலும் நாம் இரட்சிக்கப்படமுடியாது. இதைக்குறித்து பவுல், "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிற வர்களும், பலவிதஇச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப் பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும், ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப் படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் தமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்த பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்" (தீத்.3:3-7) என்கிறான்.

பேதுரு நாம் வெள்ளி மற்றும் பொன்னினாலான பொருட்களினால் நாம் மீட்கப்பட்டு அல்லது இரட்சிக்கப்பட்டவர்களாய் இருக்கவில்லை என நமக்குப் போதிக்கிறான் அவன் கூறுவதை கவனியுங்கள், " உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது.1:18,19) என்கிறான். மனிதன் இவ்வாழ்வின் மூலம் தனக்கு வேண்டியவற்றை வாங்கவோ அல்லது லஞ்சம்

கொடுக்கவோ இயலும் ஆனால் அவன் இரட்சிப்பை வாங்க முடியாது. தான் இரட்சிக்கப்படும்பொருட்டு கர்த்தருக்கு அவன் லஞ்சம் கொடுக்கவும் முடியாது. ஆனபடியினால் நாம் அழிவுள்ள பொருட்களின் மேல் நம்பிக்கை வைக்காமல் ஞானமுள்ளவர்களாய் நடப்போம். கடைசியாக, மனித மதங்களும், கோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிதலும், மற்றும் மனுஷருடைய கட்டளைகளும் ஒருவனை பரலோகம் கொண்டு செல்லாது. கிறிஸ்து, “மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்.......... என்றார்” (மத்.15:9). மேலும் பவுல் கூறும்போது பிரிவினைகளை உண்டாக்குகிறவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யவில்லை என்கிறான் (ரோம.16:17,18).

பாவிகளாய் இருக்கையில், நாம் இரட்சிப்படும்படிக்கு ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு, அது தம்முடைய இரத்தத்தைச் சிந்திய கிறிஸ்துவின் தியாகத்தின் மூலமே ஆகும். வேதவாக்கியங்களில் கிறிஸ்துவின் இரத்தத்தின் முக்கியத்து வத்தை விளக்குகின்ற பல கூற்றுகள் உள்ளன. பவுல் இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் அல்லது நாம் தேவனின் சிநேகிதர்களாக மாறுவதற்கு தகுதியடைந்திருக்கிறோம் என்றான். அவன், “சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ள வைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று” (கொலோ.1:19,20) என்கிறான். பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு, முன்னே தூரமாயிருந்த அவர்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானார்கள் என்றான். யூதர்களையும் புறஜாதியாரையும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கி தம்முடைய மரணத்தினாலே பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, அதாவது அவர்களைப் பிரித்துவைத்திருந்த பழைய பிரமாணத்தை நீக்கினார் என்று விளக்குகிறான்.

கிறிஸ்துவையும் அவருடைய இரத்தத்தையும் பற்றி பேசுகையில், பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு, “அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது” (எபே.1:) என்று எழுதினான். கொலோசெய சபை கிறிஸ்தவர்களுக்கு, (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது” (கொலோ.1:14) என்றான். கிறிஸ்து கர்த்தருடைய பந்தியை ஆரம்பிக்கையில், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மத்.26:28) என்றான். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறவர்கள் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர் (அப்.2:47). மேலும் எபேசுவில் சபை மூப்பர்களுக்கு பவுல் கூறினபோது, “உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்” (அப்.20:28) என்றான்.

கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்தும், அது எதற்காக சிந்தப்பட்டது என்பது குறித்தும், அதிலுள்ள வல்லமையைக் குறித்தும் அதிகமாகக் கூற முடிந்தது.



ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன் பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்" (எசா.53:9-12).

**நிறைவேற்றம்:**

"அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட் பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்து கொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்றார்" (லூக்.23:39-43).

**அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகள் கடாவப்படுதல்:**

"தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்து; என் நாவு மேல் வாயோடே ஒட்டிக்கொண்டது; என்னை மரணத்தூளிலேபோடுகிறீர். நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்து கொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள்" (சங்.22:14-16).

**நிறைவேற்றம்:**

"மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன், அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கைகளை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்" (யோவா.20:25,27).

**அருகே நின்றவர்களின் பரியாசம்:**

"என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம் பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே இப்பொழுது இவனை மீட்டி விடட்டும் என்கிறார்கள்" (சங்.22:7,8).

தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041



பெண்கள் பகுதி

# இரட்சகர்
## Saviour
-Betty

JESUS CHRIST
IS THE SAVIOUR OF ALL PEOPLE

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி




இயேசுவின் மரணத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்

**இயேசு இவ்வுலகத்திற்கு வந்ததன் நோக்கம்:** மனுஷருடைய பாவங்களுக்காக தன்னுடைய ஜீவனை கொடுப்பதாக இருந்தது. ஏனென்றால் இது அத்தகைய ஒரு நெருக்கடியான சம்பவமாக இருந்தது. அது பெரிய அளவில் விவரமாக அநேகம் தீர்க்கதரிசிகளினால் விளக்கப்பட்டது. கீழ் காணும் வசனங்களும் அதற்கு இணையான வசனப் பகுதிகளும் நிறைவேறுதல் ஆக இருந்தது இது இயேசுவே இரட்சகர் என்பதற்கு அசைக்கமுடியாத நிரூபணமாக இருக்கிறது.

தம்மை குற்றஞ்சாட்டியவர்களுக்கு முன்பாக இயேசுவின் மௌனம்
"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னைமயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" (ஏசா.53:7).

**நிறைவேற்றம்:**

"பிரதான ஆசாரியரும், மூப்பரும் அவர் மேல் குற்றஞ்சாட்டுகையில், அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்ல வில்லை; அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்" (மத்.27:12-14).

**அவருடைய பாடுகள்:**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்" (ஏசா.53:4-6).

**குற்றவாளிகளுடன் அவருடைய மரணம்:**

"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.... அக்கிரமக்காரரில்



ஆனால் வேதவாக்கியங்களின் மூலம் ஏற்கனவே நாம் வாசித்திருக்கிறவற்றின் சாராம்சத்தைக் காண்போமாக.

1. கிறிஸ்து குற்றமற்ற பலியாக, மனிதனுடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தி சிலுவையின் மேல் மரித்தார்.

2. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதின் மூலம், பழைய பிரமாணம் நீக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தினாலே புதிய உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது.

3. நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கீழ்ப்படிதல் மூலம் அந்த இரத்தத்தினிடத்தில் வந்து சேருகிறோம். வேறு வார்த்தையில், ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து, தன் பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, இரட்சிக்கப் படும்படிக்கு அல்லது பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் (தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு) பெற வேண்டும் என கிறிஸ்து அறிவித்தார் (மாற்.16:16; அப்.2:38). ஒருவன், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம், தண்ணீர் முழுக்கினால் கிறிஸ்துவின் இரத்தத்தோடு ஐக்கியப்படுகிறான், கர்த்தருடைய மரணத்தின் பலனை அடைகிறான். இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்களற கழுவப்படுதலாகும். இதை ரோமர் 6-ல் வாசிக்கிறோம். மேலும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள் எனச் சொல்லப்பட்டபோது, பவுல் எழுந்து, பிறகு அவன் ஒரு விசுவாசியாக மாறி, தன் பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தரை ஏற்றுக்கொண்டு அதன் பின் அவன் தன்னுடைய பாவங்கள் கழுவப்பட்டது என்று உறுதிப்படுத்தப்பட்டான். இதன் சரியான வசனத்தை நாம் வாசிக்கலாம், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்" (அப்.22:16). பின்பு, அப்போஸ்தலர்2:38-ல் பேதுரு திரளான ஜனங்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் அவனுடைய வார்த்தையைக் கேட்டு அவ்வாறே செய்தார்கள், கர்த்தர் அவர்களை இரட்சித்து அவர்களைத் தம்முடைய சபையில் சேர்த்துக்கொண்டார் (அப்.2:47). எனவே, ஒருவன் இரட்சிக்கப்பட விரும்பினால் அவன் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும், இதை அவன் செய்வதன் மூலம், அவன் கிறிஸ்துவின் இரத்தத்தினிடத்தில் சேர்ந்து அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

4. கர்த்தருடைய சபை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிரயத்துக்குக்கொள்ளப்பட்டது. ஆனபடியினால், இது இரத்தக்கிரயமானதும், மிகவும் முக்கியமானதுமாகும். நாம் கர்த்தருக்குச் சொந்தமாகும்படிக்குக் கட்டாயமாக அதனுடைய அங்கத்தினராயிருக்க வேண்டும்.

5. கிறிஸ்துவின் ஒளியில் ஒருவன் நடக்கையில் அல்லது அவருடைய சித்தத்தின்படி, அதாவது அவருக்கு உண்மையாக இருக்கின்ற போது கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவனைக் கழுவுகிறது.

6. கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளும்படி வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி, கிறிஸ்துவின் சரீரத்தையும், அவருடைய இரத்தத்திற்கு மாதிரியாக வைக்கப்பட்டுள்ள திராட்சபழரசத்தையும்

நினைவு கூரவேண்டும். இது நாம் இரட்சிக்கப்படும்படிக்கு கிறிஸ்துவின் தியாகத்தை நினைவுகூர நமக்கு உதவுகிறது.

என்னுடைய நண்பரே, கிறிஸ்து உனக்காக மரித்தார். உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தினார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? நீங்கள் இவ்வாறில்லாவிட்டால், இதை நீங்கள் செய்யும்படிக்கு உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம். உங்களுக்காக கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிற இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளத் தவறும் போது எவ்வளவு வெட்கமாயிருக்கும்!

Contact: 94435 58041

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**

## பாடம் -21 செங்கடல் சட்டங்கள்

Red Sea Rules - *Jerry Bates*

**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**




வாரன் விர்ஸ்பி ஒருமுறை "சோதிக்கப்படாத விசுவாசம் முற்றிலும் நம்பப்படாது" என்றார்.

8. விசுவாசம் என்பது வளரும் வஸ்து. ஒரு முறை அப்போஸ்தலர்கள் இயேசுவிடம் எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கச் செய்யும் என்று கேட்டனர்.

நாம் ஆவிக்குறியபடி வளரவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். உங்கள் விசுவாசம் இப்பொழுது பலமாயிருந்தாலும் கூட அது எப்பொழுதும் இன்னும் பலமுள்ளதாகவும், வளரும் என்று நம்பக்கூடியதாகவும் இருக்கமுடியும். எப்படி?

தேவனுடைய வார்த்தையைக் கற்பதன் மூலம், விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதன் மூலமாக வருகிறது (ரோம.10:17).

நாம் கற்றதை செயல்படுத்தும்போது முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். ஜார்ஜ் பெர்னாட் ஷா ஒரு முறை சொன்னார். எந்த மனிதனிடமாவது நீ நல்ல மனிதனாக இருக்க விரும்புகிறாயா என்று கேள். அவன் ஆம் என்பான் மிகுந்த பக்தியுடன். மேலும் அதிகம் பணம் வைத்திருக்க விரும்புகிறாயா என்று கேள். அவன் ஆம் என்று மிகவும் உண்மையாகச் சொல்வான். ஆனால் தான் நன்றாயிருக்க வேண்டுமென்று விரும்பிய அந்த பக்தியுள்ள குடிமகன் முன்னிருந்தது போலவே தொடர்ந்து நடந்து கொள்கிறான். பல இலட்சங்களை விரும்பிய அந்த ஊர் சுற்றுபவன் பத்து ரூபாய் சம்பாதிக்கக்கூட எந்த முயற்சியும் எடுக்கிறதில்லை.

1. வேறு வார்த்தைகளில் சொன்னால் உங்கள் விசுவாசம் வளர வேண்டுமென்றால் உங்கள் விசுவாசத்தின்படி செயல்படுங்கள்.

2. இதுவரை இல்லாவிட்டால், நீங்கள் சபையினுடைய வேலைகளில் உண்மையாக ஈடுபடுங்கள் என உங்களை உற்சாகப் படுத்துகிறேன். எனக்கு சபையில் எந்த இடமுமில்லை என்று சொல்லாதீர்கள்.



3. தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை வைத்திருக்கிறார். அது ஒருவேளை நாம் நினைக்கிறபடி நமக்கு நன்கு செய்யக்கூடிய ஒன்றாக இல்லாமலிருக்கலாம். மோசேயை தேவன் அழைத்தபோது அவன் பல சாக்குப்போக்குகளைச் சொன்னான். நான் யார்? அவர்கள் என்னை நம்பமாட்டார்கள். என்னால் மிக நன்றாகப் பேச முடியாது வேறு யாரையாவது இதற்கு அழைத்துக்கொள்ளும். தேவன் மோசேயினுடைய ஆட்சேபனை களுக்கெல்லாம் பதிலளித்தபின்பு மோசே போ என்று சொன்னார். அவர் மோசேயை தேர்ந்தெடுத்தார். ஒருவேளை மோசே சென்றிராவிட்டால் தேவனை இழந்திருப்பான். நீங்கள் தேவனுடைய வேலையைச் செய்ய மறுப்பதால் உங்களுடைய எல்லா ஆசீர்வாதங்களையும் இழந்துவிடுவீர்கள்.

சோதனைகளினால் பரீட்சித்து அந்த விசுவாசத்தைமேலும் பலப்படுத்துவது, இஸ்ரவேல் மக்களுக்கு மோசேயின் மூலமாய் ஆலோசனைகளைக் கொடுத்து அவர்களை செங்கடலண்டைக்கு கொண்டுவந்தார். அல்லது தண்ணீரற்ற ஒரு வனாந்தரத்துக்கு கொண்டு சென்றார். ஒரு மலை ஓரமாக இருந்து சீடர்களுக்கு அவர் போதித்தார். பின்பு ஒரு படகினில் ஏறச் சொல்லி பயங்கரமான புயலுக்குள் அனுப்பினார்.

9. ஒரு சோதனையிலிருந்து விடுதலை பெற்றபின் தேவனைத் துதியுங்கள். இஸ்ரவேலர் செங்கடலிலிருந்து ஒரு விடுதலை பெற்றபின் கீதம் பாடினார்கள் (யாத்.15:1,2).

விடுதலை பெற்ற அடிமையின் தேசம் தேவனைத் துதித்துப்பாடினது.

நாமும் கூட பாவ தேசத்திலிருந்து விடுதலை பெற்ற அடிமைகள் தான். "உங்கள் முகங்களை ஒவ்வொரு காலையும் துதியின் குளியலில் கழுவுங்கள்" சார்லஸ் ஸ்பர்ஜன். கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது (சங்.107:1).

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள் (கொலோ.4:2).

ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குத் செலுத்தக்கடவோம் (எபி.13:15).

10. எப்படி நாம்முடைய வாழ்க்கையை துதி அல்லது நன்றி செலுத்துவதை நோக்கமாகக் கொண்டு வாழ முடியும்?

நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைக் கவனியுங்கள். நீர் எவ்வளவு பெரியவர் என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள்.

சபை தொழுகைகளிலே ஒருமனதோடு பங்கு பெறுங்கள். நீங்கள் பங்குகொள்ளுகிற ஒரு நல்ல சபையில் சிலர் உணர்ந்து நன்றியோடு பாடுவார்கள். சிலர் பக்கத்திலுள்ளவர்கள் கேட்டு விடுவார்களோ என்று அரைமனதோடு பாடுவார்கள். சிலர் பாடவே மாட்டார்கள். சிலர் டென்னிஸ் விளையாட்டைப் பார்ப்பதுபோல அக்கம் பக்கத்தில் பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிலர் பாடல் முடியும்வரை காத்திருக்காமல் பாதங்களை நகற்றிக்கொண்டிருப்பார்கள். சிலர் தங்கள் நண்பர்களிடம் பேசிக்கொண்டிருப்பார்கள்.

விடுதலையின் நாளிலே இஸ்ரவேலர்களின் பிள்ளைகள் எப்படிப் பாடினார்கள் என நினைக்கிறீர்கள்?